# கற்றல் திறன் மேம்பாட்டு உத்திகள்

**க. ராஜ்குமார்**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்*

**முனைவர் க. சிங்காரவேலு**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்*

**ஆய்வுச்சுருக்கம்**

*கற்றல் ஓர் அறிவு உள்ள உயிரினம் முதல் ஆறறிவு உள்ள மனிதன் வரை நிகழும் ஒரு அனிச்சை செயலாக நடந்து வரும் நிகழ்வாகும். தொடர்ந்து ஒரு செயலை செய்வதின் மூலம் அவற்றிலிருந்து கிடைக்கும் அனுபவம் ஒரு கற்றல். தவறாக முடிந்த நிகழ்விலிருந்து தான் கற்ற அனுபவம் அடுத்த முறை நிகழவிருக்கும் நிகழ்விற்கான அடிப்படைக் காரணி. அதைப்போலவே கற்றல் மனிதர்கள் கல்வி பயிலும் முறை என இரண்டறக் கலந்துள்ளது. பாடத்திட்டம் சார்ந்த / பாடத்திட்டம் சாராத கற்றல் உண்டு. இரண்டிலிருந்துமே கற்றல் நிகழும். பாடத்திட்டம் சார்ந்த கல்வி முறை தற்போது நாம் பயிலும் கல்வி முறை. அடிப்படை கல்வி (1-5), உயர்நிலைக் கல்வி (6-10), மேனிலைக் கல்வி (11-12), உயர்கல்வி (இளங்கலை,முதுகலை,ஆராய்ச்சிநிலை) என்று கற்றலுக்கான தடங்கள் பெருகியுள்ளன. கற்றலில் நிகழ்த்த வேண்டிய திறன் சார் பயிற்சிமுறைகளை எடுத்துரைப்பதாக இவ்வாய்வு அமைகிறது.*

*திறவுச்சொற்கள் (Keywords): கற்றல், ஆற்றல்சார், பாடத்திட்டம், ஆல்ஃபா, கவன சிதைவு, செவிப்புலன், கட்புலன்*

## முன்னுரை

கற்றல் என்பது எல்லா உயிர்களிடத்திலும் காணப்படும் ஆற்றல்சார் திறனாகும். ஸ்கின்னர் கற்றலை ”படிப்படியாக நடத்தையில் பொருத்தப்பாடு அடைவது” என விளக்கம் தருகின்றார். மாணவர்களை பாடம் சார்ந்து மனனம் செய்யக்கூடிய அளவில் நிறுத்தி விடாமல் செய்முறைப் பயிற்சியுடன் கூடிய கல்வியை வழங்குவது கற்கும் திறனை அதிகரிக்கும் ஓர் உத்தியாக கொள்ளலாம். ஸ்கின்னர் கூற்றுப்படி படிப்படியான பொருத்தப்பாடுஎன்பது செய்முறைப் பயிற்சியுடன் கூடிய கல்வியையே சுட்டிக்காட்டுகின்றது. கற்றலில்ஒவ்வொருமுறையும்ஒருவிதமாற்றத்தை காலத்திற்கு தகுந்தவாறு மாற்றியமைப்பது அவசியம் என்பதை இக்கட்டுரை நுழை வாயிலாக அமைகிறது.

## கற்றல் - வரையறை


ஓர் உயிரினத்தின் நடத்தையில் ஏற்படும் மேம்பாட்டைக் கற்றல் என்கிறோம். (கல்வி உளவியல். பக்கம்.48)

நடத்தை மாற்றங்களை கற்றல் எனலாம். நடத்தை மாற்றம் மரபினால் பெறப்பட்ட தல்ல. அவை சுற்றுச்சூழலில் இருந்து கிடைக்கும் அனுபவங்களே நடத்தையில் தன்மையை மாற்றியமைக்கின்றன. கற்றலினால் ஏற்படும் நடத்தைமாற்றங்கள்அனுபவங்கள்செயல்பாடுகள் பயிற்சி ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்படுகின்றன. இதன் வழி கற்றல் சூழலிலிருந்து பெறப்படும் அறிவிலிருந்து தனி ஒருவரது அனைத்துக் கூறுகளையும் மாற்றியமைக்கிறது என்பது உண்மையாகிறது.

கற்றல் - ஆற்றல்சார் கற்கும் திறன் (செய்முறைப்பயிற்சி)

செவிப்புலன் வழியாக பெறப்படுகின்ற எந்த கருத்தும் நினைவில் நிற்பதில்லை. கட்புலன் வழியாக பெறப்படுகின்ற தகவல்கள் 20 சதவீதமே நினைவில் நிற்கும். விரிவுரை அல்லது கருத்துரை அல்லது கலந்துரையாடல் வாயிலாக பெறப்படும் கல்வி 30 சதவீதம் மட்டுமே நினைவில் நிற்கும். கட்புலனையும் செவிப்புலனையும் இணைத்து பெறப்படுகின்ற கல்வியானது 50 சதவீதம் நினைவில் நிற்கும். இவற்றோடு இணைத்து செய்முறைப் பயிற்சியை மேற்கொள்ளும்போது 90 சதவீதக் கற்றல் திறன் நினைவில் இருப்பதாக உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதனை,

செவிப்புலன் + கட்புலன் + கலந்துரையாடல் + செய்முறைப் பயிற்சி




இதனை மேற்காண் வரைபடம் வழி அறியலாம்.

கவன சிதைவு ஏற்படாத வண்ணம் மாணவர்களை கற்றலுக் கேற்றவாறு ஒரே நிலையில் ஒருங்கிணைக்க செய்முறைப் பயிற்சியுடன் கூடிய கற்றல் மாணாக்கரிடையே நல்ல விளைவுகளை ஏற்படுத்தும்.

## கற்றலும் தகவல் பெறுதலும்

மாணவர்கள் பாடத்திட்டம் எனும் வரையறைக்கு உள்ளாக சிக்கிக்கொள்ளாமல் உலகளாவிய அளவில் பரந்து விரிந்த தகவல்களெல்லாவற்றையும் பெறுதல் அவசியமானதாகும். இதனையே,

"பேச்சாற்றல், எழுத்தறிவு திறன்களைப் பெறுகின்ற அதே வேளையில் மாணவர்களை போதிய தகவல்கள் அறிந்தவர்களாக ஆக்க வேண்டும். இவ்வகையில் பொதுமக்களையும் சமூக வாழ்க்கையில் சகல அம்சங்கள் பற்றிய தகவல்களை அறிந்தவர்களாக ஆக்குவதற்கு அம்மக்களுக்கான கல்வி ஏற்பாடுகள் உருவாக்கப்படுதல் வேண்டும்." (சோ. சந்திரசேகரன். கல்வியியல் கட்டுரைகள்.பக்கம்-4) என்பார் ஆசிரியர் சோ. சந்திரசேகரன்.

## கற்றல் திறனை வளர்க்கும் வழிமுறைகள்

கற்பிப்பவர் (ஆசிரியர்) கற்போர் (மாணவர்) பற்றி நன்கு புரிந்து கொள்வது அவசியமாகின்றது. மாணவர்களின் திறனை அறிந்து அவற்றிற்கேற்ப மாணவர்களை வழிநடத்துதல் திறன் வளர்ப்பதில் சிறப்புக்குரிய நடவடிக்கையாகும். திருவள்ளுவர் இதையே,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்" (குறள்-517)

என்பார் வள்ளுவர். வள்ளுவர் குறிப்பிடும்படியே மாணவர்களைத் தனித்தனியாக அவரவர் திறனையும், கற்றலின் ஆர்வத்தையும் அறிவது பின் அவர்களுக்கான வழிகாட்டு முறைகளை அளிப்பதின் மூலம் மாணவர்களின் கற்றல் திறனை வளர்க்க முடியும்.

## தியானமுறையும் திறன் வளர்த்தலும்

தியானம் வழி மனத்தை ஒருங்கிணைத்தல் திறனை வளர்க்கும் முக்கிய காரணியாகும். மனம் ஒன்றுபடுவதன்வழி நினைவுத்திறன் அதிகரிக்கும். தியான முறைகளில் ஒன்றான ஆல்ஃபா தியானம் திறன்வளர்ப்பதில் முக்கிய இடம்பெறுவதுடன் மாணவர்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும். இதனை,

"மன அமைதி, எதையும் செய்துவிடலாம் என்ற நம்பிக்கை, உற்சாகம், ஆரோக்கியம், அச்சமின்மை, வெற்றி, மகிழ்ச்சி - இத்தனையையும் ஒரே சொல்லால் குறிக்க முடியுமா? இவை எல்லாவற்றையும் குறிக்கும், இவற்றுக்கு மேலும் அர்த்த பரிமாணங்க ளெடுக்கும் ஒரு சொல் உண்டா? உண்டு அதுதான் ஆல்ஃபா" என்கிறார் நாகூர் ருமி அவர்கள்.(ஆல்ஃபா தியானம்.நாகூர் ரூமி.பக்கம்-120)

### நவீன கால கல்வியும் சில முரண்களும்

மாணவர்கள் பாடத்திட்டம் சார்ந்து மட்டுமே இயங்காமல், சமூகத்தோடு தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் வகையில் பல்வேறு தொண்டு நிறுவனங்களுடனும், சேவை இயக்கங்களுடனும் ஈடுபடுவது மாணவர்கள் கற்றலோடு சேர்த்து ஒழுக்கங்களையும் கற்றுக்கொள்ள ஏதுவாக அமையும்.

நவீன காலத்தில் தொழில்நுட்பம் மாபெரும் வளர்ச்சி அடைந்து கல்வித்துறைக்கும் பெரும்பங்காற்றி வருகின்றது. இருப்பினும் இத்தொழில்நுட்பங்கள் மாணவர்களிடையே கவனச் சிதைவை ஏற்படுத்துவதாக உள்ளன என்பது நாம் ஒப்புக்கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. சான்றாக, (முகப்புத்தகம், இன்ஸ்டாக்ராம், யூட்யூப், டிக்டாக் போன்ற சமூக வலைதளங்கள், மென்பொருள்கள் மற்றும் இன்னபிற செயலிகள் - இவை 6-முதல் உயர்கல்வி பயிலும் மாணவர்களிடையே பொருத்திப் பார்ப்பது).

மாணவர்களின் மன நிலையை அறிந்தும், மாணவர்களின் திறனை அறிந்தும், மாணவர்களின் தற்போதைய கவன சிதைவை ஆசிரியர் மதிப்பிடுவதுடன் மாணவரின் கல்வியில் முன்னேற்றம் அடைவதற்கான வழியை கண்டுபிடிப்பது மாணவர் சார்ந்த கல்வி நிறுவனமும், மாணவரின் குடும்பமும் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய மிகப்பெரிய பங்களிப்பாகும்.

### தொகுப்புரை

கற்றல் என்பது தனி மனிதனுடைய சூழலை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. தன்னைச் சார்ந்த சூழலிலிருந்து பெறப்படும் அனுபவங்களின்வழி தன்னை நிருவகித்துக் கொள்கிற கூறுகளை கற்றல் வளர்க்கிறது.

கற்றல் என்பது வாழ்வின் இன்றியமையாத ஒரு அங்கமாகின்றது. இதனை வளப்படுத்த கற்றல்சார் திறன்களை மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

புத்தகங்களை வாசிப்பதும் மனனம் செய்வது என்பதோடன்றி செய்முறைப் பயிற்சி வாயிலாக என்றும் நினைவில் நிற்க கூடிய உத்திகளைமாணவர்களிடையேயன்படுத்தலாம்

தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக அனைத்து துறைகளிலும் பல முன்னேற்றங்கள் அடைந்து வருவது போன்று கல்வி துறையிலும் தொழில்நுட்பங்களை சரியான முறையில் கையாண்டு இளந்தலை முறையினரின் வாழ்வை வளப்படுத்த கல்வி அடிநாதமாக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

கற்றலோடு தியானம் செய்தல், (ஆல்ஃபா தியானம் போன்ற இன்னபிற தியான முறைகள்) மனத்தை ஒருங்கிணைத்தல், இறை வழிபாடு, சமூகத்துடன் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் இயக்கங்களுடன் (செஞ்சிலுவைச் சங்கம், சாரணர் இயக்கம், நாட்டுநலப்பணித் திட்டம்) மாணவர்களை ஈடுபடச் செய்தல் போன்ற செயல்பாடுகள் மாணவர்களின் சுய ஒழுங்கிற்கு அடித்தளமாக அமையும்.

### துணை நின்ற நூல்கள்

1. சோ. சந்திரசேகரன் - கல்வியியல் கட்டுரைகள் பூபாலசிங்கம் புத்தகாலயம்,

340, செட்டியார் தெரு, கொழும்பு. முதற்பதிப்பு - 1991
2. இரா. ஜெகதீசன் - கல்வி உளவியல் குறிஞ்சி பதிப்பகம், மதுரை. முதற்பதிப்பு - 1998
3. நாகூர் ரூமி - ஆல்ஃபா தியானம் கிழக்கு பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை. முதற்பதிப்பு - 2007.
4. கடவூர் மணிமாறன்- திருக்குறள் தெளிவுரை விடியல் வெளியீட்டகம், கரூர். முதற்பதிப்பு - 2006.

**படங்கள்**



**தியான முறை**



**கவன சிதைவு**




**புத்தக வாசிப்பும் கற்றலும்**